R 5684 (Page 142)

# “அவரையே நினைத்துக் கொள்ளுங்கள்” -பிறகு பின்பற்றுங்கள்

# “Consider Him” - Then Follow

*“ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக் கொள்ளுங்கள்.” (எபிரேயர் 12:3)*

நமது கர்த்தராகிய இயேசுவின் விசுவாசத்தை அப்போஸ்தலர் குறிப்பிட்டு கூறினார். பரம பிதா தமக்கு முன்வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு அவர் சகித்த அவமானத்தையும் இழிவானவைகளையும் சபைக்கு ஞாபகப்படுத்தினார். இயேசுவே நமது விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிறார் என்று அறிவிக்கிறார். இயேசுவின் போதனைகளுக்கும் அவர் செய்த ஒவ்வொரு செயலுக்கும் விரோதமாகவும், எதிராகவும் பாவிகளால் செய்யப்பட்ட விபரீதங்களையும் எதிர்ப்புகளையும் பொறுமையோடு சகித்த நமது ஆண்டவரின் அனுபவத்தை தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் நமது சோதனைகளிலும் கஷ்டங்களிலும் நினைவுகூர வேண்டும். அப்போஸ்தலர் நம்மை ஊக்கப்படுத்துகிறார். இயேசுவுக்கான இந்த எதிர்ப்பு அவர் கொலை செய்யும்படியாக கடைசி வரை தொடர்ந்தது.

இயேசு செய்தது போல “பாவத்திற்கு விரோதமாக போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்க்கவில்லை” என்று சபைக்கு அப்போஸ்தலர் கூறுகிறார். உண்மையைச் சொல்வோமானால், நாம் உண்மையிலேயே கஷ்டப்படுவதும் விட்டுவிடுவதும் மிகவும் சொற்பமே. விழுந்துபோன ஒரு இனத்தின் அங்கமாக இருக்கும் நமது ஜீவியகாலம் மிகவும் குறைவுதான். கொஞ்ச காலமே அது நீளுகிறது. தேவனிடம் அர்ப்பணம் செய்ய நம்மிடம் இருப்பதும் குறைவானவைகளே. அந்த சிறிய ஜீவியகாலம் போகும்போது, அற்பமானதாக இருக்கிறது என்பதையும், நமது ஆண்டவர் என்ன பெரிய காரியங்களை பெற்றிருந்தார் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். அவர் தமது பூமிக்குரிய வாழ்க்கையில் அவர் பெற்றிருந்த பரிபூரணத்தை மாத்திரமல்ல, அதற்கு முன் அவர் பெற்றிருந்ததையும், அவர் எப்படி தெய்வீக சித்தத்துக்கு கீழ்ப்படிந்து தமது மகிமையை விட்டு, மனிதனாகி, இன்னும் அவர் தம்மை மரண பரியந்தம், சிலுவை மரண பரியந்தம் தாழ்த்தினார் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். “ஆகையால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.”

அவரது அடிச்சுவட்டில் நடக்கவும், அதே அனுபவங்களை சகிக்கவும், தேவன் நமக்கு அளித்த பாத்திரத்தில்–அவரது பாத்திரத்தில் பானம் பண்ணவும் சந்தோஷப்பட வேண்டும். இப்படியாக நமது பிரியமான ஆண்டவரின் அனுபவங்களையும், விசுவாசத்தையும் கவனிப்பதால், நமது அனுபவங்கள் அதிசீக்கிரத்தில் நீங்கும் லேசான உபத்திரவம் ஆகவும் காணப்படுகிறது. “மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு அது அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில் காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள்; காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்.”(2கொரி 4: 17,18). “நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையை அடையும் பொருட்டாக நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆகையால் சகோதரரே, நீங்கள் நிலைகொண்டிருங்கள்” (2தெச 2:14,15) என்பதை நினைவுகூருவோமாக.

---

See more Books & Articles at www.foodfornewcreature.com